1973 டிசம்பர் 1]

தீரமிக்க விளையாட்டுகளில் பயிற்சி

**542 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

சேர, சோழ, பாண்டியர்களை மனதில் கொண்டு பல நல்ல காரியங்களைச் செய்து வரும் தமிழ் நாடு அரசு வில் வித்தை, குதிரை ஏற்றம், வாள் வீச்சு, ரத ஓட்டம் போன்ற தீரமிக்க வித்தைகளை அரசின் சார்பில் தமிழர்களுக்கு கற்றுவிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தத் தீரமிக்க வித்தைகளைக் கற்றுக்கொடுக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ள வில்லை. அரசு அனுமதியுடன் நடைபெறும் நிகழ்ச்சிகளில் வில் வித்தை, குதிரை ஏற்றம், வாள் வீச்சு, ரத ஓட்டம் போன்ற வித்தைகளுக்கு அரசு ஆதரவு அளித்து வருகிறது.

திரு அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த அரசு சேர, சோழ, பாண்டியர்களை மனதில் கொண்டு சேரன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்கு வரத்துக் கழகம் என்றெல்லாம் அமைக்கிற இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. தமிழர்களுக்கே சொந்த மான மல்யுத்தம், ஜூடோ எல்லாம் இன்றைக்கு ஜப்பானுக்குச் சொந்தமாகப் போய்விட்டது. டாக்டர் கருணாநிதி சோழனையும், டாக்டர் நெடுஞ்செழியன் சோழனையும், திரு. மன்னை நாராயண சாமி சோழனையும் கொண்ட இந்த அரசு தமிழர்களுக்கு இந்த தீரமிக்க வித்தைகளைக் கற்பிக்கும் திட்டத்தினை நடைமுறைப் படுத்தவேண்டுமென்ற தேவேந்திர சோழன் கோரிக்கையை பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்படிப்பட்ட வித்தைகளைப் பொறுத்து அரசாங்கமே தனியாகப் பயிற்சி கொடுக்கிற திட்டம் இல்லை. மாண்புமிகு தேவேந்திர சோழன் குறிப்பிட்டுள்ள சிலபல பயிற்சிகள் உடற்பயிற்சிக் கழகத்தினால் ஆங்காங்கே தரப்படுகின்றன. அங்கே வாள்வீச்சு, கம்பு விளையாட்டு சொல்லித் கொடுக்கப்படுகின்றன. பார்க்பேர் எக்சிபிஷன்போது ரத ஓட்டம் என்றில்லாவிட்டாலும் ரேக்ளா ரேஸ் விடப்படுகிறது.

குதிரையேற்றம் என்பது ரேஸ் க்ளப்—குதிரை ஏற்ற பயிற்சி கழகத்தினால் கொடுக்கப்படுகிறது. ஐம்பது, அறுபது பேர்கள் பயிற்சி பெற்றும் வருகிறார்கள். இராணுவத்தின் மூலமாக ஓரளவு வில்வித்தையும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இவற்றை தனியே அரசாங்கத்தின் சார்பில் கற்றுக்கொடுக்கிற முயற்சி ஏதும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாயூரம் வட்டத்தில் மனுநீதித் திட்டம்.

*553 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73-ல் மாயூரம் தாலூகாவில் மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் எவ்வளவு ?

(இ) அவைகளுள் தீர்வு காணப்பட்டவை எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : (அ) 112.

(இ) 108.

திரு. என். கிட்டப்பா : இம்மாதிரி மனுநீதித் திட்டம் செயல் படுத்துகின்றபோது அந்த அந்த வட்டார சட்ட மன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் யாரும் அழைக்கப்படுவதில்லை. குறிப்பாக எனது பகுதியில் அழைக்கப்படுவதில்லை. அப்படியின்றி இனிமேல் அந்த அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினருக்கும், பாராளுமன்ற உறுப்பினருக்கும் தெரிவித்து, அவர்களையும் அழைத்து வைத்துக்கொண்டு இந்த மனுநீதித் திட்டம் செயல் படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படிச் செய்வதில் அரசாங்கத்திற்கு ஆட்சேபணை கிடையாது. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த மனுநீதித் திட்டத்தினால் எவ்விதப் பயனும் இல்லையென்ற காரணத்தினால் இதை அரசாங்கம் கைவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.